IJNRD.ORG ISSN : 2456-4184
INTERNATIONAL JOURNAL OF NOVEL RESEARCH AND DEVELOPMENT (IJNRD) | IJNRD.ORG
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# கரிசல் இலக்கியத்தில் உடன்கட்டை ஏறுதல் – சமூகப் பார்வை

**முனைவர் அ. இராஜலட்சுமி**

**உதவிப்பேராசிரியர்**

**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**

**கோயம்புத்தூர் -641029**

## முன்னுரை

மலைகளில் தங்களது வாழ்க்கையைத் தொடங்கிய குன்றக் குறவர்களான மனிதர்கள் சமவெளிப் பகுதிகளிலும், ஆற்றுப் படுகைகளிலும் தங்களது வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக் கொண்டனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நாநிலங்களில் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட மனிதர்கள் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டனர். இயற்கையை வழிபட்ட மனித இனத்தின் வளர்ச்சி அடுத்த நிலையாக தாய்வழிச் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு பின் தந்தை வழி சமூகமாக நிலை மாறியது. சமூகத்தின் நிலை எதன் அடிப்படையில் மாறினாலும் ஆணாக பிறக்கின்ற ஒவ்வொருவரும் பிறப்பு முதல் இறப்பு வரை பெண்ணை நம்பியே வாழ்க்கையை வாழ்கின்றனர். தனது தாய் தந்தையரைத் தெய்வமாகக் கருதி வாழும் ஒரு பெண், மணம் முடித்து தனது கணவனுடன் வாழ ஆரம்பிக்கும் பொழுது தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவனுக்காகவே அற்பணக்கத் துணிகின்றாள். கணவனுக்குத் தீங்கு நேரும் சமயத்தில் தனது உயிரையும் தியாகம் செய்யக்கூடிய பெண்கள் இருந்தனர் என்பதைச் சங்ககாலம் முதற்கொண்டு நாம் அறிகின்றோம். அவ்வகையில் கோபல்லபுரத்து மக்கள் என்ற நாவலில் கி. ராஜநாராயணன் அவர்கள் எழுதிய ஒரு உடன்கட்டை ஏறும் சம்பவத்தை ஆராயக்கூடிய ஆய்வுக் கட்டுரையாக இக்கட்டுரை அமைகின்றது.

## பெண்களின் இயல்பு

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை.** [1]

சிறு தெய்வமாகிய இல்லுறை தெய்வத்தைத் தொழாது, தன் கணவன் பாதங்களையே வைகறையிறுதியில் தொட்டுக் கும்பிட்டெழும் கற்புடை மனைவி பெய் என மழை பெய்யும்.

‘**அணங்குடை நல்லில்’ என்னும் மதுரைக்காஞ்சித் தொடர்** (678) இல்லுறை தெய்வத்தைக் குறிக்கின்றது.

சிவனும் திருமாலும் போன்ற பெருந்தேவரைக் கற்புடை மனைவியரும் தத்தம் கணவனாரொடு கூடி வழிபட்டமையையும், திருநீலகண்ட நாயனாரின் மனைவியார், மங்கையர்க்கரசியார், காரைக்காலம்மையார் முதலியோர் வாழ்க்கையினின்று அறிந்துகொள்ளலாம்.

**‘வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது**
**நீணில வேந்தர் கொற்றம் சிதையாது**
**பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு”** [2]
**”பெய்யெனப் பெய்யும் மழை’,**
**‘வான்றரு கற்பின் மனையறம்’** [3]
**‘மழைதரும் இவள்** [4]
**ஒருகால் வள்ளுவர் குறள் பண்டைக்காலத்து ஒரு பத்தினிப் பெண் செய்த அற்புதத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கலாம்.** [5]

புரட்சிப் பாவலர் பாரதிதாசனார், கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழைக்கு ஒப்பாவள் என்று கூறுவதையும் இங்குக் காணலாம்.

கணவன் விருப்பப்படி வாழ்ந்து இறந்தவுடன் தானும் உயிர்விட்ட நங்கைக்கு மக்கள் சதிக்கல் எடுத்து வழிபட்டனர்.

**சங்க இலக்கியத்தில் உடன்கட்டை ஏறுதல்**

சங்க இலக்கியங்களில் உடன்கட்டை ஏறிய மனைவியரைப் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன.

**தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்**
**இகழினும் கேள்வரை எட்டி இறைஞ்சுவர்**. [6]

சங்க காலம் தொட்டே பல இலக்கியங்கள் உடன்கட்டை ஏறுவதைப்பற்றி தெரிவிக்கின்றன.

மணிமேகலையில் கணவன் இறந்த செய்தியைக் கேட்டவுடன் சிதை மூட்டி தானும் இறக்க துணிந்தாள் ஆதிரை. அவளது கணவன் இறக்கவில்லை அதனால் அவள் மேல் தீ பாயாமல் அவள் பத்தினியே என்று அசரீரி கூறியது.

புறநானூறு கற்புக்கு அடையாளமாக அருந்ததியைக் குறிப்பிடுகிறது. சிலம்பும் அருந்ததியைப் போற்றுகிறது. பிற்கால நூல்களும் அருந்ததியைப் போற்றும்.

**இருந்து தோன்று விசும்பின் உலகத்து**
**குறும்பை மணிப்பூண் புதல்வன் தாயே!** [7]

என்று அகம் அருந்ததியைப் பாராட்டுகிறது.

**கரிசல் இலக்கியத்தில் உடன்கட்டை ஏறுதல்**

கணவனுடன் கூடி வாழ்ந்து, கணவனைக் கண்ணாக கருதி வாழும் பெண்கள் சிதை மூட்டி தீ பாய்ந்தனர். அவ்வாறு தீ பாயும் பெண்களைத் தடுக்காமல் அவர்கள் போக்கிலே விட்டவர்களும் உள்ளனர். பெண்கள் தீ பாயாமல் தடுத்தவர்ஙளும் உள்ளனர். அவ்வரிசையில் தீ பாய எத்தனித்த அச்சிந்தலு என்ற பெண்ணைத் தடுத்தும் எங்கச்சி என்ற பெண்ணைத் தடுக்காமலும் விட்டனர் கோபல்லபுரத்து ஊர் மக்கள்.

உடன்கட்டை ஏற விருப்பமில்லாத பெண்களையும் சுற்றத்தார் வலுக்கட்டாயமாக தீயில் தள்ளி விட்டனர் என்று எங்கோ படித்த நியாபகம் இருக்கையில் இக்கதையைப் படிக்கும் போது சதி எனும் பெருங்கொடுமை தடுப்புச் சட்டம் நிறைவேற்றும் முன்பு சுற்றத்தார் தீ பாய்ப்பவர்களைத் தடுத்துள்ளனர் என்பதும் பெண்கள் தாங்களே விரும்பி தனது கணவருடன் உடன்கட்டை ஏறினார்கள் என்பதும் தெரிகின்றது.

**தீ பாய்வதைத் தடுத்த நிகழ்வு**

> **“புருஷனுடைய பிணத்தை எரிக்கும் போது தன்னையும் சேர்த்து எரித்துவிடும்படி அச்சிந்தலு மஞ்சள் உடுத்தி மாலைபோட்டுக் கொள்ளப் போகும் போது தடுத்து நிறுத்திவிட்டார்கள்”** [8]

அச்சிந்தலு என்ற பெண் சிறுவயதிலேயே திருமணமாகி பதினைந்து நாட்களே கணவனுடன் வாழ்ந்தவள். அச்சிந்தலு தனது கணவன் இறந்தபின் தனக்கு நேர் இருக்கும் கைம்பெண்ணிற்கான இன்னல்களை நினைத்து உடன்கட்டை ஏறத் துணிந்தாள். கணவன் இறந்த நிலையில் அவனுடன் உடன்கட்டை ஏற மக்கள் அச்சிந்திலுவை மக்கள் அனுமதிக்கவில்லை.

**பல் சான்றீரே! பல் சான்றீரே!**
**‘செல்க’ எனச் சொல்லாது, ‘ஒழிக’ என விலக்கும்,**
**பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே!** [9]

பூதப் பாண்டியனின் மனைவி பெருங்கோ பெண்டு தனது கணவன் இறந்தவுடன் அவனுடன் சேர்ந்து சிதையில் தீப்பாய முன்வந்தாள். தனது கணவருடன் சேர்ந்து தீப்பாய்வதே தனக்கு இன்பம் என்றும், தனது கணவருடன் சேர்க்கின்ற இந்தத் தீயானது தனக்குத் தாமரைத் தடாகத்தில் நீராடுவதைப் போன்றதே என்றும் கூறுகின்றார்.

தீபாய்பவளைத் தடுத்த சான்றோர்களைப் பார்த்து கூறுகின்ற பாடலாக இப்பாடல் புறநானூற்றில் உள்ளது.

**புருசன் இறந்தவுடன் எல்லாப் பெண்களும் உடன்கட்டை ஏறிவிடுவதில்லை. ஏறும்படி வற்புறுத்தப்படுவதும் இல்லை. அபூர்வமாக சிலர் மட்டுமே இப்படி விரும்பிச் செய்கிறார்கள். விரும்பினாலும் சில பெண்களுக்கு அனுமதி கிடைப்பதில்லை.** [10]

**எங்க்கச்சிக்கு கிடைத்த அனுமதி**

**எழுந்திருந்தாள் எங்க்கச்சி. மஞ்சள் இடிக்கும்படிச் சொன்னாள். செவ்வரளிமாலை கொண்டு வரும்படிச் சொன்னாள். இதெல்லாம் ஆனவுடன் அவள், மஞ்சளில் நனைத்த ஈரப்புடவையுடன், அவிழ்ந்து நீண்டு தொங்கிய கூந்தலெல்லாம் மஞ்சள்நீர் சொட்ட, செவ்வரளி மாலையைக் கழுத்தில் போட்டுக்கொண்டு படியிறங்கித் தெருவில் வந்து நின்றாள்.**
**அவளை யாரும் தடுக்கவில்லை; தடுக்க முடியாது என்பது தெரியும்.** [11]

உடன்கட்டை ஏறுவது அரசாங்கத்திலிருந்து தடைசெய்யப்படாத நேரமாக இருந்ததால் ஊரார் கூடி முடிவெடுக்க வேண்டிய நிலையிலிருந்தது அக்கிராமம்.

‘**கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்**’ [12]

தனது கணவருடன் அன்பு பிரியாமல் வாழுகின்ற மனைவி அவன் இறந்தவுடன் அவனது சிதையுடன் தானும் சென்று உயிர் விடுவது அவளது மனதுடன் ஏற்புடையதான ஒன்றாகும் எனக் கிராம மக்கள் நினைத்தனர்.

**எங்க்கச்சியப் பற்றி ஊர்மக்களின் எண்ணம்:**

**“டே சித்தய்யா, எங்க்கச்சிக்கு என்ன பதில் சொல்லுவோமடா” என்று கலங்கினார்;, “இதக் கேட்டா அவ உயிரை விட்டுருவாளடா” என்றார் துக்கத்துடன். அப்படியேதான் அது நடத்தது.** [13]
**மணியம் கோயிந்தப்ப நாயக்கர் சொன்னார், எங்க்கச்சியைத் தடுக்க எனக்கு இஷ்டமில்லை. அவள் இருந்தாலும் இனிச் செத்தவள்தான். உயிருக்கு உயிராய் இருவரும் வாழ்ந்தவர்கள். விரும்பி சிதை ஏறுவதைத் தடுப்பது கூடாது என்றுதான் படுகிறது.** [14]
**தாங்கள் நினைத்ததையே மணியம் நாயக்கர் சொல்லி விட்டார் என்று அங்குக் கூடியிருந்த பெரியவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள்.** [15]

திருமணம் முடித்த பின் கணவன் மனைவி இருவரும் இருவேறு மனநிலை கொண்டவர்களாக உள்ளனர். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அன்போடு வாழும் இல்லற வாழ்வனது ஊரார் போற்றும் வகையில் அமைந்துள்ளது என்பதையும்,

ஒருவருக்காக மற்றவர் தனது உயிரையே கொடுக்கும் அளவு புரிதலுடன் வாழும் நிலை நிலவியுள்ளது என்பதையும் மேற்கூறிய வரிகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

எங்கச்சியைப் பற்றி ஊர் மக்கள் அனைவருக்கும் தெரியும். அவளுக்கும் சீனிநாயக்கருக்கும் உள்ள மன உறவையும் அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த ஆழ்ந்த நேசத்தையும் அந்தக் கிராம மக்கள் அறிந்து இருந்தனர். மனம் ஒத்த இல்லற வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பது இந்த நாவலில் நமக்குப் புலப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

**உடன்கட்டை ஏறக் காரணங்கள்**

- கணவன் இறந்த பின் சமூகத்தில் கைம்பெண்ணிற்கு ஏற்படும் இன்னல்களினால் உடன்கட்டை ஏறுவது

  அச்சிந்திலு உடன்கட்டை ஏறத்துணிந்தது இக்காரணத்தை அடிப்படையாகக் கொண்டது.

- கணவன் மீதுள்ள அன்பு மிகுதியினாலும் உடன்கட்டை ஏறுவது

  எங்கச்சி உடன்கட்டை ஏறத்துணிந்தது இக்காரணத்தை அடிப்படையாகக் கொண்டது.

**சதியாகும் தகுதி அற்றவர்கள்**

கணவன் இறந்தவுடன் மனைவி உடன்கட்டை ஏறிவிடமாட்டாள். கணவன் இறந்த பெண்கள் அனைவரும் உடன்கட்டை ஏறுவதில்லை என்பதையும் இந்நாவல் நமக்குக் காட்டுகின்றது.

சதியாகும் தகுதி அற்றவர்களாக கோபல்லபுரத்து நாவலில் குறிப்பிடப்படுவோர்:

- கர்ப்பவதிகள்,
- தாய்ப்பாலூட்டி பாது காக்கும் நிலையிலுள்ள தாய்மார்கள்,

  வரலாற்றுச் சான்றின்படி கி.பி. 316 இல் இந்திய தளபதி என்பவர் (Ketus) கிரிக் மன்னன் அண்டிகோனஸ் என்பவனிடம் போரிட்டு இறந்த போது கேடுஸின் இளம் மனைவி தீ பாய்ந்தாள். கேடுஸின் முதல் மனைவிக்குப் பிள்ளை இருந்ததால் உடன்கட்டை ஏறவில்லை (Alkeker 1938-122). [16]

- பூப்படையாத பெண்டுகள்,
- கணவன் உடலைச் சிதையேற்றும் நாளில் வீட்டுக்குத் 'தூரமான' பெண்கள்.

மேற்கண்ட பெண்கள் உடன்கட்டை ஏறுவதும் கிராம்ம மக்கள் அனுமதிப்பதில்லை என்று நமக்குத் தெரியவருகின்றது. மேலும் சதியாகின்ற பெண்களுக்கு நடுகல் எடுத்து வழிபடும் வழக்கமும் நமது சமூகத்தில் இருந்துள்ளது.

**சதிக்கற்கள்**

**சதிக்கற்களை இருவகையாக வகைப்படுத்தலாம். கணவன் இறந்தபின் உயிர்விடும் மனைவிக்கு எடுக்கும் சதிக்கல் முதல் வகையாகும். கணவனுடன் வாழும் பெண்ணோ, விதவையோ கற்புக்குப் பங்கம் வரும்போது தீயில் விழுந்து தன்கற்பை நிலை நாட்டுதல் இரண்டாம் வகையாகும்.** [17]

**தீ மூட்டும் நிகழ்வு**

**உடன்கட்டை ஏறுதலுக்கு 'மூட்டம் கிடையாது. பன்னிரண்டு அடிநீள அகலத்துக்கு, சச்சதுரமாக முழங்கால் உயரத்துக்குக் காய்ந்த விறகுகளைச் சேகரித்துக் கொண்டு வந்து பரப்பினார்கள். குடங்குடமாக அதன் மீது எண்ணெய் கொண்டுவந்து பரக்க ஊற்றினார்கள். கட்டையடுக்கிச் சுற்றிலும் தீ நாக்குக்கு எட்டாத தூரத்தில் சுற்றிலும் கம்புகளைத் தட்டி, வடக்குப் பக்கம் மட்டும் ஒரு வாசல் விட்டு, சுற்றிலும் 'மாத்து'த் துணிகளால் மறைந்தார்கள். கட்டடை அடுக்கின் நடு மையத்தில் சீனிநாயக்கரின் உடல் வைக்கப் பட்டிருந்தது.** [18]

உடன்கட்டை ஏற்றுதல் நேரில் பார்த்த அனுபவத்தை 1798ல் எழுதி வைத்துள்ளார் ஐரோப்பியர் Donald Campbell ..இடம் தஞ்சாவூர் கோட்டையிலிருந்து ஒருமைல் வடக்கே உள்ள காவிரி ஆற்றின் கரை

**சில பிராமணர்கள் விறகுக் கட்டைகளால் எட்டடி நீளத்தில் நான்கடி அகலத்தில் சிதை தயாரித்துக் கொண்டிருந்தார்கள் ..முதலில் மூன்றடி உயரத்திற்கு கம்புகளை செங்குத்தாக நிறுத்தினார்கள் ..உள்ளே சிறிய மரத்துண்டுகளால் நிரப்பினார்கள் ..**[19]

மேற்குறிப்பிட்ட இரு செய்திகளிலிருந்து அந்தந்த இடத்திற்குத் தகுந்த மாதிரி சிதை மூட்டம் நடைபெற்றுள்ளது என்பது தெரியவருகிறது.

**பெண்ணிற்கான சடங்கு**

**எங்கச்சி சுற்றத்தார் புடைசூழ வீட்டை விட்டுப் புறப்பட்டாள். அவள் புறப்பட்ட உடன் மயிர்கூச்செறியும் படியாக பெண்கள் குலவையிட்டார்கள்.** [20]

ஊருக்கு வெளியில் இறந்தவர்களின் உடலை ஊருக்குள் கொண்டு வரும் வழக்கமில்லாதவர்கள் கரிசல் நில மக்கள். ஆதலால் ஊருக்கு வெளியில் இறந்த எங்கச்சியின் கணவர் சீனிநாயக்கரின் உடல் சுடுகாட்டு ஆலமரத்தின் அடியில் வைக்கப்பட்டிருந்ததால் எங்கச்சி அங்கே அழைத்து வரப்பட்டாள்.

> **அந்தப் பெண்ணுக்கு 16 வயதிற்கு உள்ளே தான் இருக்கும் ..வெள்ளை சேலை கட்டி இருந்தாள் ..தலையிலும் கழுத்தைச் சுற்றிலும் வெள்ளை நிற மல்லிகை பூ சூடி இருந்தாள் ..அவளைச் சுற்றி 20 பெண்கள் நின்று கொண்டு ஒரு வெள்ளைத் துணியை அவள் தலைக்கு மேல் வெயில் படாமல் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.** [21]

டொனால்ட் கேம்பல் பார்த்த சம்பவத்தில் கணவன் இறந்தவுடன் தீ பாய வேண்டிய பெண்ணையும் உடன் அழைத்துக் கொண்டே வந்திருந்தனர் என்பது தெரிய வருகிறது.

> **அப்பெண்ணுக்குச் சில சடங்குகள் செய்து இறுதியில் அவளாகவே தீயில் விழும்படி ஏற்பாடு செய்வார்கள். இசைவாணர், இசை மீட்க நாட்டிய நிகழ்ச்சி நடைபெற, கணவனை இழந்த பெண்ணிற்கு ஒப்பனை செய்தபின், உயர்ந்த ஆடைகள் அணிவிப்பர். சொத்துக்களை ஆண்பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பங்கிட்டு வழங்கியபின் தெருவில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டுக் குழியில் விழச் செய்வர். உடம்பை மறைக்கும் சிறு ஆடை மானத்தை மறைக்கும் சிறு உடை என்க) தவிர பிறவற்றை தெருவில் வரும்போது கழற்றி எறிவர். இறுதியில் உடம்பில் எண்ணெய் ஊற்றப்பட்டுத்தீயில் மடிவர் என்று பார்போசா தான் நேரில் கண்டதைக் குறிப்பிடுகிறார்.** [22]
>
> **நூனிஸ் என்ற வரலாற்றறிஞர் இறந்தவரின் மனைவி செய்யும் சடங்கினைப் பிராமணன் ஒழுங்குபடுத்துவான் என்று குறிப்பிடுகிறார்.** [23]

டி.வி. மகாலிங்கம் கூறியது போலவும் நூனிஸ் என்ற வரலாற்றறிஞர் கூறியது போலவும் எங்க்கச்சிக்கும் சடங்குகள் செய்யப்பட்ட செய்தியும் இந்த நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

> **ஒரு வயோதிகச் சுமங்கலி எங்க்கச்சியின் காலில் விழுந்து கும்பிட்டாள். “சுமங்கலிகளுக்கெல்லாம் கிடைக்காத பாக்யம் ஒனக்குக் கிடைச்சிரும்மா” என்று உணர்ச்சிவசப்பட்டாள். ஒவ்வொரு வீட்டின் முன்னாலும் எங்க்கச்சியை நிறுத்தி சுமங்கலிகள் அவளுடைய பாதங்களை மஞ்சள் நீரால் கழுவி, தங்கள் கூந்தலினால் அவள் பாதங்களைத் துடைத்தார்கள். சேகண்டியும் தப்பும் அடிப்பவர்கள் ஸ்ரீகோவிந்தனின் திரு நாமத்தைப் பாடி, பலமாகத்தட்டி ஒலி எழுப்பிக்கொண்டே முன்னால் வந்து கொண்டிருந்தார்கள்.** [24]

சதிக்கல் சிற்பங்களில் கணவருடன் மனைவியையும் காட்டுவதும், மனைவிக்குப் பதில் கையைக் காட்டுவதும், மனைவி மட்டும் கையைக் காட்டுவது என்ற வடிவில் நடுகல்லில் சிற்பங்கள் செதுக்கப்படுகின்றன.

தனது கணவருக்கும் தனக்கும் மன ஒற்றுமையை அதிகரிக்க வேண்டிக் கொள்வதும், தீ பாய்ந்தவளைப் போல் அன்பு வாழ்க்கை தமக்கும் அமைய வேண்டும் என்று வணங்குபவர்களுக்குக் கையைக் காட்டி அருள் வழங்குவது போல இந்த நடுகற்கள் காணப்படுகின்றன.

**எங்க்கச்சியின் அன்பும் உறுதியும்**

> **எங்க்கச்சியை எங்களால தாமரிக்க முடியலை. எங்களை இழுத்துக்கிட்டு ஓடினால்னு தான் சொல்லணும். அவமேலெ ஏதோ ஒரு அருள் வந்து அவளுக்குள்ளெ புருந்துட்டதுபோலத்தான் தெரிஞ்சது எங்களுக்கு.**
>
> **மறைப்பைச் சுற்றி வந்து வாசலுக்கு நேராக வந்து நின்றதும் நிலைகொள்ளவில்லை அவளுக்கு. தனது இஷ்டமுள்ள புருஷனின் செல்லப் பெயர்களை உரக்கச் சொல்லிக் கூப்பிட்டாள். அந்தக் குரல் அங்கிருந்தவர்களையெல்லாம் ஒரு பீதியான பரவசத்தை உண்டு பண்ணி உருக வைத்தது.**
>
> **அவளைப் பிடித்துக் கொண்டிருப்பதே சிரமமாகி விட்டது. தீ உயர்ந்து பற்றி எரியும் சமயத்தில் எங்க்கச்சி அவர்களை உதறித்தள்ளி, இரண்டு எட்டுக் பின் வாங்கி ஒரே ஓட்டமாக ஓடி தீப்பறவை போல பாய்ந்து தனது கணவனைத் தழுவிக்கொண்டாள்.** [25]

ஒரு பெண் தனது கணவனைப் பிரிந்து இருக்க முடியாத நிலையையும் அவனுடன் சேர்ந்தே இறக்க வேண்டும் என்ற உள்ள உறுதி பாட்டினைக் கொண்ட அன்பு நிலையையும் எங்க்கச்சி என்ற கதாபாத்திரத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் நாவலாசிரியர்.

**முடிவுரை**

அறத்தையும் வீரத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக விளங்கியுள்ளனர் என்பதற்கு மாபெரும் உதாரணம் இந்த உடன்கட்டை ஏறும் நிகழ்வு. பெண் மன தைரியம் மிக்கவள் என்பதை பல இலக்கியங்கள் நமக்கு எடுத்துக்காட்டினாலும் எங்க்கச்சி என்ற கதாபாத்திரத்தின் மூலம் வீரப்பெண்களின் திடமும் கணவன் மேல் தீராக்காதல் கொண்ட பத்தினிப் பெண்களின் திட்பமும் நமக்குத் தெரியவருகின்றது. இறந்த கணவனின் உடலைத் தழுவி இறக்கத் துணிந்த பெண்களின் பெரும் வீரமாகவே எங்க்கச்சியின் கதாபாத்திரம் அமைகின்றது. இந்த நாவலில் மட்டுமல்லாது உடன்கட்டை ஏறுவதை நேரில் பார்த்த ஐரோப்பியர்களின் பதிவுகளின் மூலமும் எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் தன்னை வணங்கியவர்களுக்கு அருள் வழங்கியும் தனது நகைகளை இயல்பாக மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தும் தனது கணவனுடன் தீயில் உயிருடன் தன்னை எரித்துக்கொண்ட பெண்களும் இருந்துள்ளனர் என்பதை நம்மால் அறியமுடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. குறள் . 55
2. சிலப்பதிகாரம், 18: 445-7
3. மணிமேகலை, 22 : 53
4. மணிமேகலை, 22 : 13
5. திருக்குறள், தேவநேயப்பாவாணர் உரை, குறட்பா.55
6. பரிபாடல் 20-80-89
7. அகநானூறு 42-3-5
8. கோபல்லபுரத்து மக்கள், கி.ரா.,ப.எண்.20
9. புறநானூறு. 246:1-3
10. கோபல்லபுரத்து மக்கள், கி.ரா.ப.எண்.22
11. கோபல்லபுரத்து மக்கள், கி.ரா.,ப.எண்.20
12. சிலம்பு.,வழக்குறைக்காதை
13. கோபல்லபுரத்து மக்கள், கி.ரா.,ப.எண்.25
14. கோபல்லபுரத்து மக்கள், கி.ரா.,ப.எண்.27
15. கோபல்லபுரத்து மக்கள், கி.ரா.,ப.எண்.27
16. நடுகற்கள், ச.கிருஷ்ணமூர்த்தி,ப.எண்.298
17. நடுகற்கள், ச.கிருஷ்ணமூர்த்தி,ப.எண்.298
18. கோபல்லபுரத்து மக்கள், கி.ரா.,ப.எண்.27
19. திரு.முத்துக்குமார் சங்கரன், தூத்துக்குடி
20. கோபல்லபுரத்து மக்கள், கி.ரா.,ப.எண்.27
21. திரு.முத்துக்குமார் சங்கரன், தூத்துக்குடி
22. Early south Indian Paleography – T.V.Mahalingam, 1967, pg.no 258
23. நடுகற்கள், ச.கிருஷ்ணமூர்த்தி,ப.எண்.298
24. கோபல்லபுரத்து மக்கள், கி.ரா.,ப.எண்.28
25. கோபல்லபுரத்து மக்கள், கி.ரா.,ப.எண்.28

International Research Journal
IJNRD
Research Through Innovation